# மானியின் குரல்

ஓசை – 01 | யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி | சித்திரை 2016 | குரல் – 01

## அதிபரின் ஆசியுரை



மானிப்பாய் இந்துக் கல்லூரியின் காண்பிய ஊடக கழகத்தினரினால் மாணவர்களது திறன்களை வெளிக்கொண்டு வரும் நோக்கிலும் பாடசாலை நிகழ்வுகளை ஆவணப்படுத்தும் வகையிலும் வெளியிடப்படுகின்ற "மானியின் குரல்" எனும் பத்திரிகை சிறப்புற வாழ்த்துகின்றேன்.

மே.இந்திரபாலா
அதிபர்

## மாணவர்களது ஆளுமை வெளிப்பாட்டிற்கு களமமைத்த கண்காட்சி



மானிப்பாய் இந்துக் கல்லூரியின் காண்பிய ஊடக கழகம், சித்திரக் கழகம் இணைந்து நடாத்திய புகைப்படம், சித்திர கண்காட்சி கல்லூரியின் தொழில்நுட்ப பீட மண்டபத்தில் காண்பிய ஊடக கழகத்தின் தலைவர் எஸ்.சாய்ராம் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் கல்லூரியின் முதல்வர் எம்.இந்திரபாலா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

புகைப்படக் கண்காட்சியில் ஆர்.றொசான், இ.பகிரதன், இ.விதுசன், எஸ்.நிஜந்தன், தி.திசாங்கன், எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோரது புகைப்படங்கள் என 100 புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

இப் புகைப்படங்களிற்கான வழிகாட்டலினை காண்பிய ஊடக கழக பொறுப்பாசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் மேற்கொண்டிருந்தார்.

இதேவேளை சித்திர கழகத்தின் பொறுப்பாசிரியர் தி.தீபனின் வழிகாட்டலில் மாணவர்களால் ஆக்கப்பட்ட 100 சித்திரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

நிகழ்வில் பிரதிஅதிபர், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டு பார்வையிட்டனர்.

மாணவர்களது ஆளுமையினை வெளிப்படுத்துவதற்கான களமாக இக் கண்காட்சி அமைந்ததாக பார்வையிட்டவர்கள் கருத்து பகிர்ந்தனர்.


## க.பொ.த. சாதாரண தரம் 2105 சிறந்த பெறுபேறு

| | |
|---|---|
| சூ. ஒலைக்சன் | 8ஏ சீ |
| இ. பவிசன் | 7எ பி சீ |
| சே. குமரன் | 7ஏ பி எஸ் |
| த. கீர்த்திகன் | 6ஏ 2பி எஸ் |
| பி. தனுசன் | 6எ 2பி சீ |
| த. துசீபன் | 5எ 4பி |
| றொ. ஆன்றோய் | 5ஏ 1பி 2 சீ எஸ் |

## கோட்டத்தில் முதல் இடம்

| | | |
|---|---|---|
| பிரிவு II | எழுத்தாக்கம் | - நி.ரிஷிகேசசர்மா |
| பிரிவு V | இலக்கணம் | - ப.குருபரேசன் |
| பிரிவு V | பேச்சு | - கோ. பிரவின்ராஜ் |
| பிரிவு II | தனிஇசை | - க. தனுஜன் |
| | திறந்த போட்டி விவாதம் | |
| | நாட்டார் பாடல் | |

## மானி. இந்து மாணவர்கட்கு தேசிய விருது



மூன்றாவது கண்ணால் உலகை காண்போம் எனும் தொனிப் பொருளில் கல்வி அமைச்சினால் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையே பாடசாலையில் இயங்குகின்ற ஊடக கழக உறுப்பினர்களுக்கிடையே தேசிய ரீதியில் நடத்தப்பட்ட 21 வயதுப் பிரிவினருக்கான புகைப்படப் போட்டியில் எஸ்.நிஜந்தன் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தினை பெற்றுக்கொண்டுள்ளார்.

தமிழ்-சிங்கள-முஸ்லீம் மாணவர்களுக் கிடையே பொதுவாக நடத்தப்பட்ட போட்டியில் தமிழ் மாணவன் எனும் வகையில் வெற்றி பெற்றதும் குறிப்பிடத்தக்கது.



களனி பல்கலைக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தரம் 7 இல் கல்வி பயிலும் கணேசலிங்கம் தனுஜன் கனிஸ்ட பிரிவில் கர்நாடக சங்கீதம், நாட்டார் இசை ஆகிய இரு போட்டிப் பிரிவுகளிலும் தேசிய ரீதியாக முதல் இடத்தினை பெற்றுக் கொண்டுள்ளார். இதேவேளை மேற் பிரிவினருக்கான பரத நாட்டியப் போட்டியில் உயர் தரத்தில் தொழில் நுட்பப்பிரிவில் கல்வி பயிலும் அன்ரனி கொலன்சியா இரண்டாம் இடத்தினை பெற்றுக் கொண்டுள்ளார்.

## காண்பிய ஊடக கழகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

எமது கல்லூரியின் புகழ்பூத்த அதிபர் எஸ். சிவநேஸ்வரனின் ஆலோசனையுடன் கல்லூரியின் ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரனின் சிந்தனையில் 2015ம் ஆண்டு தொழில்நுட்ப பிரிவு மாணவர்களது ஒத்துழைப்பினாலும் அர்ப்பணிப்பினாலும் மாணவர்களது நலன் கருதி 2013ம் ஆண்டு யூன் மாதம் உருவாக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களிடையே ஒளிந்திருக்கின்ற திறமைகளினை வெளிக்கொணர்வதினை முக்கிய நோக்கமாகக் கொண்டு இக்கழகம் உருவாக்கப்பட்டது.

இக்கழகத்தின் தலைவராக சி.நிஜந்தன், உபதலைவராக ஜோசுவபிரசாத், செயலாளராக பா.ஜெயரூபன், உப செயலாளராக அபிசாந், பொருளாளராக விஸ்னுகாந், வடிவமைப்பாளர்களாக சுபிதன், திசாங்கன், படப்பிடிப் பாளர்களாக பிரேக்சன், கிருசாந், கலிங்ஸ், கரீஸ், தாரூசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பொறுப்பாசிரியரது ஆலோசனையோடு Visuval Media Club (காண்பிய ஊடகக்கழகம்) என சூட்டப்பட்ட பெயர் அர்த்தம் நிறைந்த வகையில் பலரது கவனத்தினை பெற்றுக்கொண்டது.

கழகத்திற்கான சின்னம் ஒன்று வடிவமைக்கப்பட வேண்டும் எனும் ஆசிரியரது எண்ணத்திற்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில் வடிவமைப்பாளர் எஸ்.சுபிதனால் கழகத்தின் நோக்கத்தை தெளிவாகவும் வீச்சுடனும் பிரகடனம் செய்யும் பாணியில் தனது கைவண்ணத்தை வெளிக்காட்டியுள்ளார்.

இக் கழகத்தில் உள்ள அங்கத்தவர்கள் அனைவரும் மிகவும் திறமை வாய்ந்தவர்கள். இவர்கள் தங்களில் உள்ள திறமைகளினை இக்கழகத்தின் ஊடாக வெளிக் காட்டி வருகின்றனர். உதாரணமாக தரமான சிறந்த புகைப்படங்களை எடுத்தல், சிறந்த வீடியோக்களை எடுத்தல், சிறந்த முறையில் வடிவமைப்பு வேலைகளை செய்தல், பாடசாலை நிகழ்வுகளிற்கான ஒழுங்கமைப்புக்களை செய்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இக்கழகத்தின் அங்கத்தவர்கள் பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகள் அனைத்தையும், புகைப்படங்களாகவும் வீடியோ பதிவுகளாகவும் மாற்றி எமது இணையதளத்தில் பதிவேற்றி வருகின்றனர்.

இக்கழகத்தின் முதற்கட்ட நடவடிக்கையாக பாடலாக்க திறனையும், பாடும் திறனையும் வெளிக்கொணரும் முகமாக Face Of Music (இசையின் முகங்கள்) என்ற தலைப்பில் பாடசாலை வாழ்க்கையினையும், தமிழின் செம்மையினையும் உணர்த்தும் விதமாக மிக குறுகிய நாட்களினுள் இரு பாடல்கள் கொண்ட இறுவெட்டினை வெளியிட்டிருந்தோம்.

சர்வதேச தரத்திற்கு இணையான இசைக்கோலங்களினை தமிழில் புதுமையுடனும் வீச்சுடனும் எதிர்காலத்தில் தரமுடியும் என்ற நம்பிக்கையினை பலரது விமர்சனங்களில் இருந்தும் மதிப்பீட்டு கண்ணோட்டத்தில் இருந்தும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

இக்கழகமானது மெல்ல மெல்ல கால் ஊன்றி இலட்சியம் எனும் பெரு விருட்சத்தினை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றது. பாடசாலை மட்டம் என்ற எல்லையை தாண்டி சம்பந்தப்பட்ட துறைகளில் குறிப்பிடத்தக்க காத்திரமான பணியை செய்வதற்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது

புதுமை, மனோபாவமும், எதையும் சிறப்பாக நிறைவேற்றும் திறமையும் கொண்ட இளைஞர்கள் கழகத்தின் பணிகளை பலரும் வியக்கும் வண்ணம் ஆற்றி வருகின்றனர்.

உலக வளர்சியினை அனுசரித்து பல உச்சங்களை தொட வேண்டும் என்ற நோக்கோடு தொடக்கத்தில் இருந்து அர்ப்பணிப்பு சிந்தனையோடு இக்கழகம் உழைத்து வருகின்றது. சம்பந்தப்பட்ட துறைகளின் நவீன வளர்ச்சிப் போக்கை உள்வாங்கியபடி தனக்குரிய தனித் தன்மை கெடாமல் தனியான பாதை வகுத்து இக்கழகம் செயல்பட்டு வருகின்றது.

நன்றி!

**பா.ஜெயரூபன்**
**செயலாளர்**
**காண்பிய ஊடக கழகம்**
**யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி**

## மனிதனைத் தேடி!

உலகில் இல்லாத ஒருவனைத்
தேடி ஓர் நீண்ட
நடைப்பயணம்...
அவன்பெயர் மனிதன்
அரக்கர்கள் நிறைந்த சூழலில்
அவர்கள் பிடியில் அகப்பட்டு
அரக்கனாகவே மாறிய ஒருவன்...
தூரத்தில் இருக்கும் பூக்களுக்கு
ஆசைப்பட்டு அவன்
முட்களுக்குள் சிக்குண்டுவிட்டான்
அவனை மீட்டெடுக்க ஏங்குகின்றேன்.
எனக்கு கைகொடுக்க யாருமில்லை
அதற்குகாலம் சொன்ன பதில்....
இது சந்தர்ப்ப வாதிகள் சூழ்ந்த உலகம்

**அ.மோகனப்பிரியன்**
**2017 உயர்தரப்பிரிவு**
**பொறியியல் தொழில் நுட்பம்**

## புலமைப் பரிசில்

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தரம் 9ல் கல்வி பயிலும் மாணவர்களது கல்வி மேம்பாட்டிற்கு ஏதுவான வகையில் இலங்கை நிப்போன் கல்வி, கலாசார நிலையத்தினரால் புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் தம்ப பாடசாலை, யாழ். நாகவிகாரை தமிழ் பௌத்த சங்க தலைவர் ஏ.ரவிக்குமார், ஸ்ரீ மீகாஜீந்தரே விமலதேரர் ஆகியோரின் அனுசரனையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் இ.தவரூபன், அ.அனோஜன், எஸ். பானுசன் ஆகியோருக்கு மேற்படி புலமைப்பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

இப்புலமைப்பரிசிலானது உளநல மன்ற பொறுப்பாசிரியரின் ஒழுங்குபடுத்தலில் கல்லூரியின் முதல்வர் எம்.இந்திரபாலா முன்னிலையில் வழங்கப்பட்டது.

மானியின் குரல்

மானிப்பாய் இந்துக் கல்லூரி
மானிப்பாய்
தொ.பே: 021 225 5658

## ஓ! வண்ணத்துப் பூச்சிகளே...

மாணவர்கள் தேசத்தின் சொத்துக்கள். எதிர்காலத்தினை தகவமைகின்ற பாரிய பொறுப்பு வாய்ந்த இயங்கியலினை உடைய உயிரிகள் எனும் வகையில் அவர்களிற்கான சமூகவியல் பெறுமதிகள் கனதியானவை. இலட்சிய வேட்கையில் தமது நகர்வினை சிறந்த முறையில் சமூக பெறுமானம் சார்ந்த வகையிலும் சமூக அங்கீகாரம் உடைய வகையிலும் தம்மைபுடம் போட்டுக் கொள்ள வேண்டும்.

தமக்கு கிடைக்கின்ற வாய்ப்புக்களினை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் தம்மை தயார்ப்படுத்தி தமது இலட்சியத்தினை அடைந்து கொள்ள முடியும்.

கல்விச் சமூகம் பற்றிய நவீன கணிப்பிலே வண்ணத்துப் பூச்சிக் கோட்பாடு என்ற தொரு கோட்பாடு காணப்படுகின்றது.

வண்ணத்துப் பூச்சிகளினை நேசிக்கின்ற வர்கள், வண்ணத்துத்து பூச்சிகளாக உருவெடுப்பதற்கு முன்னுள்ள பருவமாகிய மயிர் கொட்டிகளினை நேசிக்காது அவற்றினை அழித் தொழிப்பதற்கான செயற்பாடுகளில் சமூகம் ஈடுபடும்.

மாறாக மயிர்கொட்டிகள் அத் தடைகளில் இருந்து மீறி வண்ணத்து பூச்சிகளாகிய பின் சமூகத்தினால் வசீகரிக்கப்படுகின்றன.

அதே போன்று மாணவர்களாகிய நீங்கள் உங்களது கல்விப் புலத்தில் பல தள வெளிகளினை தாண்டிய பின்னரே உங்களது இலட்சியத்தினை அடைந்து கொள்ள முடிகின்றது.

மாறாக நீங்கள் சமூகம் விரும்பாத செயல்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வதினால் நீங்கள் சமூகத்தினால் நிராகரிக்கப்பட்வர்களாகி மயிர்கொட்டிகளின் நிலைக்கு தள்ளப்படுவீர்கள் மாறாக உங்களை நீங்களே தகவமைத்து கொள்வதன் மூலம், வண்ணத்து பூச்சிகளாக சமூகத்தினால் நேசிக்கப்படுபவர்களாக உங்களால் மாற்றம் அடையமுடியும்.

எது எவ்வாறாயினும் உங்களுடைய இலட்சிய பயணம் நோக்கிய வாழ்வு உங்களது கைகளிலே.(ஆ-ர்)

## சுகமான காற்றுக்கு சோதனையா?

சுகமான காற்றுக்கு
இன்று சோதனையா?
இனிதான எம் சமூகத்தில்
வேதனையா?

உன் கண்களிலே
மை பூசிய - நெஞ்சிலே
நஞ்சுக் கரி பூசும்
போதையது மாயையே!

வரட்சியை போக்கிட
மழையிருந்தும் - சில பாவிகள்
கைகளில் ஏன் இன்னும்
அக்கினிச் சுடர்கள்

பேனா பிடித்த விரல்களிலே
ஏன் இந்த பிடிவாதம்
பேரின்பம் கொண்டிட வா
நீ கொண்ட தீர்மானம்

புன்னகை புரிய வேண்டிய
உன் உதடுகளில் நீ இன்று
புகை கொண்டு கொண்டு
மறைக்கின்றாய் புன்னகையை..

அற்ப நேர மகிழ்ச்சிக்காய்
ஆறறிவு கொண்டுணர்வு நீ
அக்கினிக்குள்ளே அணைந்திட
பார்த்திடலமா?

நீ தட்டி விடும்
சாம்பலிற்குள்ளா உன்
நுரையீரல் அடக்கம்?

சின்னச் சின்னச்
சவப்பெட்டிகளை உன்
கைகளிலே சுமக்கின்றாயே
அவை யாருக்காக? உனக்கே
தானா?

சட்டங்கள் பிறந்துன்னை
காத்திட முன் நீ மரணப்
படுக்கையிலே மண்டியிட
நேர்ந்தால் என்னாகும்?

கை கழுவியும் போகாதிருக்க
அவையென்ன கைரேகைகளா
இல்லையே நீ முயன்றால்
முடிவுரை எழுதலாம்.

பேதையுள்ளம் நாடி வந்து
நல்லிடம் கண்டிட்ட
போதை உணர்வு தனை
போக்கிட நீ வேண்டும்.
விட்டு விடு அனைத்தையுமே,
உன்னையே நீ தியாகம்
செய்ய போதையது வேண்டாமே

அஞ்ஞானம் உனைப்
புதைக்கப் பார்கின்றது போதை
உணர்வுகளில் - நீ
வீழ்ந்து விடாதே

ஈன்றெடுத்த உன்
பெற்றவர்க்கும் நல்லன
சொல்லும் நற் சமூகத்தும்
நற் பிள்ளையாய் நீயிரு.

நாளைய சமுதாயம்
உனையே பார்த்து
உன் வழி தொடர்ந்து
நடை பயிலும் அல்லவா?

வீழுகின்ற உயிர்களை
குறைத்து விட நீ வீறு
கொண்டு எழுந்து வா!
வீரனாக அல்ல வித்தகனாய்..........

**எம். அபிசாந்**
**உயர்தரம் தொழிநுட்பப்பிரிவு**

## நாடக விழா - 2015

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த நாடக விழா 2015ம் ஆண்டில் இடம் பெற்ற போட்டியில் முதலாம் இடத்தினை சுந்தரர் இல்லமும் இரண்டாம் இடத்தினை வாகீசர் இல்லமும் மூன்றாம் இடத்தினை மாணிக்கர் இல்லமும் பெற்றுக்கொண்டன.

சிறந்த நடிகராக லோ.கௌதமன், சிறந்த நடிகையாக சு.கலைக்சன், சிறந்த துணை நடிகராக யே.சானுஜன், சிறந்த துணை நடிகையாக எஸ். நிதர்ஷன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# எனது எதிர் காலம்

**பாடசாலை மட்ட உளநலநாள் போட்டியில் முதலாமிடம் பெற்ற கட்டுரை**

உலகில் மானிடர் தோன்றிய காலத்தே அவன் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற முக் காலத்தையும் சிந்திக்க ஆரம்பித்துவிட்டான். இதில் ஒவ்வொரு மானிடனுக்கும் எதிர்காலத்தை எண்ணிப்பார்க்கவேண்டிய அவசியமுண்டு.

எதிர்காலத்தை பற்றி கனவு காணுங்கள் என அறிவுடைய மன்னர்கள் கூறியிருப்பதை அறிகின்றோம். எனவே தான் மானிடப்பிறவியாகி நானும் எனது எதிர்காலத்தை பற்றி பல கனவுகளுடன் இருக்கின்றேன்.

"நடந்ததை நினைத்து கலங்காதே நடந்ததை மறந்துவிடு" என்று கிறிஸ்த்தவ மத தத்துவம் வலியுறுத்துகின்றது.ஆம் நடந்து முடிந்ததை பற்றி எண்ணிக்கொண்டிருப்பதால் ஏதும் நடக்கப்போவதில்லை வாழ்வில் இறந்த காலத்தை மறந்து எதிர்காலத்தை எவ்வாறு செழிப்பாக்குவது என்பதே இதன்கருத்து.

"எதிர்காலம் நமக்குண்டு எதற்கும் பயமில்லை.." என்ற கூற்றுக்கிணங்க இனி நாம் காணப்போகும் வாழ்வு எதிர்நோக்கி வந்து கொண்டிருக்கிறது. என் எதிர்காலம் என் கையிலே என்பதை உணர்ந்து அதற்கேற்ற வகையில் என் வாழ்கை ஓட்டத்தை சரியான சுவட்டினுள்ளே ஓடி முடிக்கவேண்டும்.

எதிர்காலத்தை நோக்கி செல்லும் போது அதனூடாக மிக எளிதாக சென்றுவிடமுடியாது பல சவால்களை, பல இன்னல்களை, பல அவமானங்களை, எதிர்கொண்டே செல்ல முடியும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இவ்வாறு எதிர்காலத்தை நோக்கிய பயணப் பாதையில் வரும் சவால்களை எதிர்கொள்ள நான் இப்போது என்னை தயார்ப்படுத்த வேண்டும்.

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்ற பாரதியாரின் கூற்றுக்கிணங்க வாழ்வில் வரும் சவால்களை கண்டு அச்சப்படக்கூடாது அதை துணிவோடு எதிர்கொண்டு செல்லும் போதே எனது எதிர்காலம் முழுமையானதாக நன்மையானதாக அமையும்.

எதிர்காலத்தை நோக்கி ஓடும் போது வரும் இடையூறுகளை கண்டு என்ன இந்த வாழ்கை என்ற சலிப்பு தேன்றக் கூடாது வலி கண்ட இதயம் தான் என்றும் நிலையான சுகத்தை அனுபவிக்கும் என்பதை உணர்ந்து வரும் இன்னல்களை சகித்து வாழும் சகிப்புத் தன்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒளிமயமான எதிர்காலம் கிடைக்க வேண்டுமானால் வாழ்கையில் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காரியங்களையும் திட்டமிட வேண்டும். என் எதிர்காலம் ஒளிமயமாவதும், இருளாவதும் நாம் திட்டமிடுவதிலேயே உண்டு.

எதிர்காலத்தை பற்றிய கனவு ஒவ்வொரு மானிடனுக்கும் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியே டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் இளைஞர்களை கனவு காணச் சொன்னார்.

கனவு காண வேண்டும் என்ற சொன்னால் கனவு காணுவதோடு நின்றுவிடக்கூடாது எதிர்காலத்தை பற்றிய கனவை நிஜமாக்குவது நாம் எடுக்கும் முயற்ச்சியிலேயே தங்கியுள்ளது.

ஓட்டப் பந்தயத்தில் ஓடி முடிப்பவனே வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக் கொள்வது போல எனது எதிர் காலத்தை நினைத்தபடி அமைத்து கொள்ளும் வரையில் ஓடிக்கொண்டிருக்கும் போது எனது எதிர்காலம் செழிப்பாக மாறும்

கனவுகானும் வாழ்க்கையாவும் கலைந்து போகும் ஓடமாவது எதிர்கலத்தை குறித்து எந்த முயற்ச்சியும் எடுக்காத மனிதரே இதை உணர்ந்து செயற்ப்பட வேண்டும்.

இறைவன் எமது கரங்களில் எதிர்காலத்தை தந்துள்ளார். அதை பயனுள்ள முறையில் அமைப்பது எமது கைகளிலேயேயுண்டு, வரவிருக்கும் எதிர்கால வாழ்வை வீணாக்காமல் நல்ல மரத்தை போல் பெறுமதி மிக்தாக மாற்றியமைக்க வேண்டும்.

"ஒளிமயமான எதிர்காலம் என்னுள்ளத்தில் தெரிகிறது.." என்ற ஒரு கவிஞர்பாடியுள்ளார். உள்ளத்து நினைவுகளே வாழ்வை சீர்ப்படுத்தும். உள்ளத்திலே எதிர்காலத்தை பற்றிய கனவுகள் நிரம்பியிருக்க வேண்டும். அப்போது தான் எனது எதிர்காலம் உலகோர் பார்த்து ஆகா என்று சொல்லத்தக்கதாக அமையும்.

- **சு.கலைக்சன்** 10B

## கற்பனையில் பிறந்த ஓவியம்

கற்பனையில் பிறந்த ஓவியமே
திரைக்கதை சொல்ல வந்த காவியமே
அன்பினில் உருவான என ஆருயிரே
அமிர்தத்தை குடித்து பிறந்த தேவதையே

உன் இதயத்தை கொள்ளை அடித்ததற்காய்
உன் கண்களால் என்னை கைது செய்ய வந்தவளே
மன்மதனின் மச்சினியே மாயவனின் பத்தினியோ
கண்களால் ஆட்சி செய்ய வந்த தேவியின் அம்சமோ

மன்மதனையே மயக்க வந்த மாயக்கண்கள்
அதில் மவுடி வாசித்து மயக்கும் உனது உதடுகள்
அன்பினை சேர்த்து வைக்கும் அழகிய இதயம்
அதில் உள்ள நான்கு அறைகளிலும் எனது இதயம்

**நாகதாஸ்-வினித்**
**யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி**
**2016 கலைப்பிரிவு**

## படைப்பாளிகளே

**கவிதை, கட்டுரை, படித்ததில் பிடித்தது குறுநாடகங்கள், சிறுகதைகள், நாவல்கள் எதுவாயினும் உங்களின் ஆக்கங்களும் இடம்பெற வேண்டுமாயின் எழுதி அனுப்புங்கள்.தரமான ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**பிரதம ஆசிரியர்**
**மானியின் குரல்**
**மானிப்பாய் இந்துக்கல்லூரி**
**மானிப்பாய்**

## சீதனம்

**நாடகமாந்தர்கள்**

1. செல்வதுரை 2. ராஜ்குமார்(செல்வதுரையின்மகன் )
3. ராஜதுரை 4. சுமதி
5. திருடன் 1 6. புண்ணியமூர்த்தி(புறோக்கர்)
7. திருடன் 2

**காட்சி 01**

(செல்வதுரையின்வீடு)
(செல்வதுரை CC இருந்து பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தல்)

செல்வதுரை:(பத்திரிகைவாசித்தல்)"ரூ 200000 சீதனம் கொடுப்பதாக கூறி திருமணம் செய்து வைத்த பின்னர் அதனை கொடுக்க மறுத்ததால் மனைவியை அடித்து துன்புறுத்திய கணவன் "என்னடா இது அவனில என்ன பிழை வாக்கு கொடுத்த மாதிரி செய்யத்தானே வேனும்.

(ராஜ்குமார்நுழைதல்) ( DL இல் இருந்து CC நோக்கி நிற்றல்)

ராஜ்குமார்: அப்பா இ நான் வரட்டேபோட்டு.

செல்வதுரை: எங்கடப்பாமோனே?

ராஜ்குமார்: வேறு எங்க வேலைக்கு தான்.

செல்வதுரை: அடராசா உன்கிட்டா ஒரு முக்கியமான விசயம் கதைக்கோணும்.

ராஜ்குமார்: என்ன? முக்கியமான கதை.

செல்வதுரை: உனக்கு வரன்பாக்கிறது பற்றி தான்.

ராஜ்குமார்: அதுக்கெல்லாம் என்னப்பா அவசரம் ஒரு நிரந்தர வேலை கிடைக்கட்டுமன் பிறகு பாப்பம்.

செல்வதுரை: அப்பிடியெல்லாம் இந்த மாதிரி நல்ல காரியங்களை பின் தள்ளிப்போட்டுக் கொண்டு போகக்கூடாது. இதெல்லாம் காலகாலத்தில நடக்க வேனும்.

ராஜ்குமார்: அப்பிடியென்டா என்னை நீங்கள் இன்டைக்கு விடுறமாறித்தெரிலே (சிரித்தவாரே)

செல்வதுரை: புறோக்கர் புண்ணியமூர்த்தி சொன்னவர் உந்தவட்டிக்க் கடை ராஜதுரையின் மகளுக்கு வரன் பாக்கினமாம்.

ராஜ்குமார்: அதுக்கு

செல்வதுரை: அதுக்கு உன்ர போட்டோவையும் குறிப்பையும் குடுத்தனான். அவயலுக்கு நல்லா பிடிச்சுக் கொண்டுதாம் குறிப்பு இரண்டும் நல்ல பொருத்தமாம்.

ராஜ்குமார்: அப்பிடியென்டால்..............

செல்வதுரை:இனி ஒண்டும் நீ கதைக்க வேண்டாம். வேலைக்கு போட்டு வா பிறகு பாப்பம்.

ராஜ்குமார்: இல்லையப்பா நான் என்ன சொல்ல வாரனெண்டால்.

செல்வதுரை: நான் நல்லா விசாரிச்சு பார்த்தனான். ராயதுரைக்கு பெரியவீடு வட்டி, அடைவேன்டு நல்லா உழைச்சிருக்கிறார். அதைவிட 100 ஏக்கர் தென்னந்தோப்பும் கிடக்குது மகளுக்கு 5 லச்சம் சீதனம் கொடுக்க கூடியளவு அவருக்கு வசதியிருக்காம்.

ராஜ்குமார்: அது தானே பார்த்தன் . இலட்சம் ரூபாய்க்கு என்னை விற்கபோறியள்( அதுதானே CCயில் இருந்து DR கோபமாக இற்குவருதல்).

செல்வதுரை: மகனை பின் தொடரந்து அட அப்படி யெல்லாம் இல்லை. அந்த சீதனக்காசை வேண்டித்தான் உந்த சில்லறை கடனையெல்லாம் அடைக்கவேனும்.

ராஜ்குமார்: சரி என்னவோ பண்ணுங்கோ நான் போட்டுவாறன் ( DRஇல் இருந்து மேடையை விட்டுவெளியேறல்.)

(செல்வதுரை முன் மேடையுடாக யோசித்தவாறே வெளி யேறல்) (தொடரும்)

**தி. திஸ்னுகன் 11B**

## கணித குறுக்கிலக்கப் போட்டி இல-01

**இடமிருந்து வலம்**

1. சதுர எண்ணிலிருந்து அதன் வர்க்க மூலத்தை கழிக்க வரும் எண்.
4. பத்தாவது முதன்மை எண் வரையுள்ள எண்ணும் எண்களின் கூட்டுத்தொகை .
7. இரண்டின் அடுக்குகளில் ஒன்று
9. வருடம் ஒன்றில் உள்ள வாரங்களின் எண்ணிக்கை
10. முதலிமை 5 ஆகவுள்ள தொடையின் தொடைப் பிரிவுகளின் எண்ணிக்கை (உபதொடை)
11. ஒரு நாளில் உள்ள நிமிடங்கள்
13. பல்கோணி ஒன்றின் அகக் கோணங்களின் கூட்டுத்தொகை
14. அடுத்து வரும் மூன்று எண்களின் பொ.ம.சி யின் நான்கு மடங்கு
16. 49 இன் வர்க்க மூலத்தின் மூன்றாம் அடுக்கு
17. எட்டாவது சதுர எண்
19. 2, 4, 8 எனும் எண்களின் முழு எண் அடுக்காக எழுதக்கூடிய எண்
20. கிட்டிய 10 இல் 70 ஐ விடையைத் தரும் மிகப் பெரிய எண்

**மேலிருந்து கீழ்**

1. கன எண் (மூன்றாம் அடுக்கு எண்)
2. முதல் இருபது எண்ணும் எண்களின் கூட்டுத்தொகை (தலைகீழாக உள்ளது)
3. ஏழின் மடங்குகளில் ஒன்று குறைந்த எண்
5. முதன்மை எண்ணொன்றின் ஆறு மடங்கு
6. 16900 சதுர அலகை பரப்பளவாக உடைய சதுரத்தின் சுற்றளவு.
8. சதுர எண்ணிலும் 99 அதிகம்.
12. 3, 8, 17 இன் மடங்குகளில் ஒன்று
13. சதுர எண்ணிலும் ஒன்று குறைவான எண்
14. ஒரு குறொஸ் இலுள்ள பேனாக்களின் எண்ணிக்கை
15. 2, 3, 4, 5, 6 ஆகிய எண்களால் வகுபடக் கூடிய சிறிய எண் (தலைகீழாக உள்ளது)
16. ஒழுங்கான தசகோணியின் ஒரு புறக்கோணத்தின் பருமன்
18. $101101_{\text{இரண்டு}}$ ஐ தசம எண்ணில்

---

### கணித குறுக்கிலக்கப் போட்டி இல-01

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | 8 | ■ | 9 | |
| 10 | | ■ | 11 | 12 | | |
| | ■ | 13 | | | ■ | ■ |
| ■ | 14 | | | | 15 | ■ |
| 16 | | | ■ | ■ | 17 | 18 |
| 19 | | ■ | 20 | | ■ | |

மாணவர் பெயர் :......................................................

தரம் : ........................

## வலயத்தில் வெற்றி



வலய மட்டத்தில் இடம் பெற்ற கணித நாடகப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் கனிஸ்ர பிரிவு மாணவர்களின் "தங்கராம்" எனும் நாடகம் இரண்டாம் இடத்தினை பெற்றுக்கொண்டுள்ளது. இந் நாடகவாக்கத்திற்கான எண்ணக்கரு கல்லூரியின் ஆசிரியர் கு.பஞ்சலிங்கம், எழுத்துருவாக்கம், நெறியாழ்கையினை நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் மேற்கொண்டுள்ளார். இவ் ஆற்றுகையில் யே.சானுஜன், தி.தனுஜன், சு.கலைக்சன், ச.குபேரன், சி.சிவானுஜன், த.டிபோர்டன், ஜெ.ஜெயகபிலன், த.தனுசன், கு.கௌதம், ர.மிதுன், தவரூபன், கி.றி.பிரியந்சன், பிரகாஸ், த.சதீஸ்குமார் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர் ஆற்றுகைக்கான பாடல்களினை பா.ஜெயரூபன் யார்த்துள்ளதுடன் பின்னனி இசையில் ஓகன் திருமதி கிருபாமேரிவசீகரன், டொல்கி-ய.யதுசன், சைற்றம் அபிசேக், பாடல் பயிற்ச்சியினை சங்கீத ஆசிரியை திருமதி சிந்துஜா-றெஜீகேசன் வழங்கினார். பாடகர்களாக ச.சுதர்சன், தனுஜன், ஏ.துவாரகன் ஆகியோர் செயற்பட்டனர்

## "போதை எமக்கு பகை" தெருவெளி ஆற்றுகை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வேண்டு கோளிற்கினங்க போதையற்ற தேசத்தினை உருவாக்குவோம் எனும் தொனிப்பொருளில் யூலை 9" ஓகஸ்ட் 9 வரையான காலப்பகுதியில் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதைப் பொருள் விழிப்புனர்வு செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக மானிப்பாய் இந்துக்கல்லூரி (தேசியப் பாடசாலை)யில் "போதை எமக்கு பகை" எனும் விழிப்புணர்வு தெருவெளி ஆற்றுகை இடம்பெற்றது



"போதை எமக்கு பகை" எனும் தொனிப்பொருளில் கல்லூரி அதிபர் மே.இந்திரபாலாவின் வழிகாட்டலில் போதை விழிப்பனர்வுசெயற்திட்டத்தின் செயலாளர் மா.நேருவின் ஒழுங்குபடுத்தலில் நாடகத் துறை ஆசிரியர் எஸ். ரி.அருள்குமரனின் நெறியாழ் கையில் இத்தெருவெளி ஆற்றுகை 15.07.2015 பகல் 1.30 மணியளவில் கல்லூரியின் மைதான முன்றலில் இடம்பெற்றது.

## "சுயம் தேடி" தெருவெளி ஆற்றுகை


உளநல நாளினை முன்னிட்டு "உன்னத ஆளுமையினால் உலகை வெல்வோம்" எனும் தொனிப்பொருளினை அடிப்படையாகக் கொண்ட வகையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் உளநல மன்றத்தின் பொறுப்பாசிரியர் திருமதி சு.வசந்தகுமாரின் ஒழுங்கபடுத்தலில் அதிபர் மே.இந்திரபாலாவின் வழிகாட்டலில் எஸ்.ரி. அருள்குமரனின் நெறியாழ்கையில் சுயம் தேடி எனும் தெருவெளி ஆற்றுகை கல்லூரி முன்றலில் இடம்பெற்றது.

இவ்வாற்றுகையானது மாணவர்கள் சுய மதிப்பினை கொண்டிருக்க வேண்டியதன் அவசியம் தனித்துவங்கள் இல்லாது போகின்ற போது ஏற்படுகின்ற பிரச்சினைகளினை அடிப்படையாகக் கொண்ட வகையில் நிகழ்த்தப்பட்டன.

இவ்வாற்றுகையில் யே.சானுஜன், சு.கலைக்சன், சிந்துஜன், சி.சிவானுஜன், தி.தனுஜன், தி.திஸ்னுகன், ஸ்ரீ.சாதுசன், ச.குபேரன், கு.கௌதம், மிதுன், யூலியதர்சன், பிரகலாதன், திவ்வியன், த.தனுஜன், நிரோஜன், கு.சரூயன், டொல்கி யே.யதுசன், பாடல்கள் பா.ஜெயரூபன், பாடல்களிற்கான பயிற்சி கல்லூரியின் சங்கீத ஆசிரியை திருமதி சிந்துஜா றெஜிகேசசர்மா பாடகர்கள் பு.தக்சாந், ஜெ.ஜெயவர்னன் எண்ணக்கருக்கவாக்கம் திருமதி சுபாஜினி வசந்தகுமார் அரங்க முகாமைத்துவம் சிந்துஜன் ஒப்பனை பொறுப்பாளர் தி.தனுஜன் உதவி நெறியாழ்கை தி.திஸ்னுகன்,யே.சானுஜன் எழுத்துநெறியாழ்கையினை எஸ்.ரி. அருள்குமரன் மேற்கொண்டிருந்தார்.



## மாவட்டத்தில் இரண்டாமிடம்



கொழும்பு றோயல் கல்லூரியினால் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட மாவட்ட போட்டியில் இரண்டாம் இடம். இவ் நாடகத்தின் ஆற்றுகையாளர்களாக யே.சானுஜன், தி.தனுஜன், சு.கலைக்சன், ச.குபேரன், கு.சதுசன், சி.சிவானுஜன், த.டிபோர்டன், ஜெ.ஜெயகபிலன், கு.கௌதம், ர.மிதுன், தவரூபன், சிந்துஜன், யே.யதுசன், ச.சுதர்சன், ஏ.துவாரகன், உ.கரிஸ், பா-ஜெயரூபன், ஸ்ரீ-சாதுசன், வி-கனிஸ்ரன், சி-ஜெயகோபன், ச.விதுசன், க.ரிதுசன், அ.றொசான், பா.ஜெயரூபன், குயின்சன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

எழுத்துருவாக்கத்தினை தி.தனுஜன், சு.கலைக்சன் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

எழுத்துருவாக்கம், நெறியாள்கை மேற்பார்வையினை எஸ்.ரி.அள்குமரன் மேற்கொண்டிருந்தார்.

நாடகப்போட்டியில் சிறந்த நடிகனாக சி.சிவானுஜன் சிறந்த துணை நடிகனாக யே.சானுஜன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## குறுக்கு - இலக்க போட்டி விதிகள்

1. பத்திரிகையிலுள்ள கூப்பனையே போட்டியாளர் பயன்படுத்த வேண்டும். (ஏனையவை நிராகரிக்கப்படும்)
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் பயன்படுத்தமுடியும்.
3. ஒன்றிற்கு மேற்பட்டவர்களால் சரியான முறையில் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் குலுக்கல் முறை மூலம் வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார்.
4. பூர்த்திசெய்யப்பட்ட கூப்பன்களை வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவில் உள்ள குறுக்கிலக்கப் பெட்டியில் இடவும்.
5. வெற்றி பெறும் முதல் மூவருக்கு பரிசில்களும் ஐந்து பேருக்கு பாராட்டும் சான்றிதழும் வழங்கப்படும்.
6. போட்டி முடிவுத் திகதி 23-05-2016
7. நடுவர்களின் முடிவே இறுதியானது.

## நீண்ட கால இடைவெளியின் பின்னர் மரதனோட்டம்



மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியினை முன்னிட்டு மாணவர்களுக்கான மரதனோட்டப் போட்டி 23ம் திகதி ஜனவரி மாதம் சனிக்கிழமை காலை 6 மணிக்கு கல்லூரியின் முதல்வர் எம்.இந்திரபாலா தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்விற்கு நிதி அனுசரனை வழங்கும் கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரட்ணம் பிரதம விருந்தினராகவும் கலந்துகொண்டார்.

மருதடி விநாயகர் ஆலயத்தில் ஆரம்பித்து சுதுமலை அம்மன் கோவிலடியூடாக சென்று தாவடியினை அடைந்து கே.கே.எஸ். வீதியூடாக சென்று குளப்பிட்டி சந்தியூடாக ஆனைக்கோட்டையினை அடைந்து மூத்த விநாயகர் கோவிலடியாக வந்து கல்லூரியினை வந்தடைந்தனர்.

போட்டியில் முதலாம் இடத்தினை சுந்தரர் இல்லத்தினை சேர்ந்த எஸ்.சோபிதன் 33.13 என்ற நேரக்கணக்கில் ஓடி முடித்து முதலாம் இடத்தினையும் அதே இல்லத்தினை சேர்ந்த பி.அபினேஸ் 33.21 என்ற நேரக்கணக்கில் ஓடி முடித்து இரண்டாம் இடத்தினையும் எஸ்.தர்சிகன் 33.30 என்ற நேரக்கணக்கில் ஓடி முடித்தும் மூன்றாம் இடத்தினையும், பெற்றுக்கொண்டனர்.

## மாகாணத்தில் வெற்றிகள்



வடமாகாண சம்பியன் சிப் போட்டியில் குமித்தே பிரிவுப் போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி தரம் 11ல் கல்வி பயிலும் ம.மதுஷன் வட மாகாணத்தில் முதலாம் இடத்தினை பெற்றுக கொண்டுள்ளார்.



ஆளுநர் சுற்றுக்கிண்ண சதுரங்க போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் உயிர்.தொழில் நுட்ப பிரிவில் கல்வி பயிலும் மாணவி பிரேமினா ஸ்ரீரஞ்சன் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தினை பெற்றுக்கொண்டுள்ளர்.

## தேசியத்தில் வெற்றி



கொழும்பு ஜோசப் கல்லூரியினால் நடத்தப்பட்ட 5 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி SAUCER CHAMPION பெற்றுள்ளது.

இறுதி ஆட்டத்தில் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியினை எதிர்தாடியது. இரு அணிகளும் கோல்களினை பெற்றுக்கொள்வதற்கு முயற்சித்த போதிலும் கோல்களினை பெற முடியவில்லை. அதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. போட்டியில் வெற்றியாளரினை தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை உதையில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியான தெரிவாகியது.

## வலயத்தில் முதலிடம்



பாடசாலைகளுக்கிடையே நடைபெற்று வருகின்ற பூப் பந்தாட்ட தொடரில் வலய மட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் 15 வயதுப் பிரிவினர், 19 வயதுப் பிரிவினர் வலிகாம வலயச் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இறுதிப் போட்டி மானிப்பாய் இந்துக்கல்லூரி பூப்பந்தாட்ட திடலில் இடம்பெற்ற போது 15 வயதுப் பிரிவு, 19 வயதுப் பிரிவினர் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலய அணியிரை எதிர்த்து ஆடி வெற்றிபெற்றனர்.




அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்டு வருகின்ற உதைபந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் 17 வயதுப் பிரிவினர் வலய சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

புனித கென்றியரசர் கல்லூரியினை எதிர்த்தாடிய மானிப்பாய் இந்துக்கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இதேவேளை 15 வயதுப் பிரிவினர் 3ம் இடத்தினை பெற்று க்கொண்டது குறிப்பிடத்தக்கது.

# நிகழ்வின் நிழல்கள் புகைப்படத் தொகுப்பு







மானிப்பாய் இந்துக் கல்லூரியின். வருடாந்த இல்ல மெய் வல்லுனர் போட்டி கல்லூரி முதல்வர் எம். இந்திரபாலா தலைமையில் இடம்பெற்ற போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும் பாண்ட் வாத்திய நிகழ்வினையும் வெற்றி பெற்ற சுந்தரர் இல்லத்திற்கு பிரதம விருந்தினர் வெற்றிக் கேடயம் வழங்கிக் கௌரவிப்பதையும் படத்தில் காணலாம்.







மருதடி விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு 2017ம் ஆண்டு கலைப் பிரிவில் கல்வி பயிலும் மாணவர்கள் சிரமதானத்தில் ஈடுபடுவதினை படத்தில் காணலாம்




காண்பிய ஊடக கழகத்தினரால் செய்தித் தாள்களின் கண்ணோட்டம் எனும் நிகழ்வினை கல்லூரியின் முதல்வர் ஆரம்பித்து வைப்பதனையும் மாணவர்கள் செய்தித் தாள்களை வாசிப்பதனையும் காணலாம்.











மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இருந்து கா.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களிற்கான அனுமதி அட்டையினை பூஜை வழிபாட்டிற்கு பின்னர் வழங்கும் வைபவம்.



மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் தை மாதம் முதல் பங்குனி மாதம் வரையான காலப்பகுதியில் மாணவர்களுக்கான யோகாப் பயிற்சிகள் உளநல மன்றப் பொறுப்பாசிரியரினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டது.



இப் பத்திரிகையானது சி.கே.ஜே. பிறிண்ட் கிறபிக்ஸ் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு மானிப்பாய் இந்துக் கல்லூரியின் காண்பிய ஊடக கழகத்தினரால் வெளியிடப்பட்டது.